**ஏறாவூர்பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 19 ஆம் திகதியன்றும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் ஏறாவூர்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றிலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது . |

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வாசகர்களால் மீள ஒப்படைக்கப்படாத ரூபா 102,270 பெறுமதியுடைய 800 புத்தகங்களும் பெறுமதி மதிக்கப்பட்டு இறுதி புத்தக இருப்பில் இருந்து கழிக்கப்படாது சொத்தாக காட்டப்பட்டு வருகின்றது. | பதிவளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் பெறுமதி இறுதிப் புத்தகத்திலிருந்து கழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2017ம் ஆண்டு நன்கொடையாக பெறப்பட்ட மொன்டேறோ வாகனத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | சரியான தொகை மதிப்பிடப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | சரியான பெறுமதி மதீப்பீட்டறிக்கை பெறப்பட்டு நிதிக்கூற்றில் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரூபா 276 மில்லியன் பெறுமதியுடைய திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் 2017 ஏப்ரல் UNOPS நிறுவனத்தினால் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள போதிலும் இச் சொத்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | சொத்துக்கள் அனைத்தும் கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | சொத்துக்களின் சரியான பெறுமதி இறுதிக்கணக்கிற்கு கொண்டு வருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | JICA திட்டத்தின் மூலம் ரூபா 40 மில்லியன் பெறுமதியுடைய கிராமிய நீர் விநியோகத் திட்டம் பூரணப்படுத்தப்பட்டு மே மாதம் 2015 இல் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள போதிலும் இச் சொத்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | சொத்துக்கள் அனைத்தும் கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | சொத்துக்களின் சரியான பெறுமதி இறுதிக்கணக்கிற்கு கொண்டு வருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| | (i) நிதி ஒழுங்கு விதி 571 | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 641,548 தொகையான காலங்கடந்த வைப்புக்களை கொடுத்துத் தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காலங்கடந்த வைப்புக்களினை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு லருகின்ரது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| | (ii) நிதி ஒழுங்கு விதி 1645 மற்றும் 1646 | சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் ஓட்டக்குறிப்புக்கள் மற்றுட மாதாந்தப் மூலட பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைட அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாதாந்தம் ஓட்டக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது என்பதனையும் தயவுடன் அறியத்தருகின்றேன். |

**2.** **நிதி மீளாய்வு**

**2.1** **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 27,755,192 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவீனத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 33,302,965 தொகையாக இருந்தது.

**2.2** **வருமான நிர்வாகம்**

**2.2.1** **மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| விபரம் | மதீப்பீடு | உண்டியல் தொகை | அறவிடப்பட்டது | நிலுவை | மதீப்பீடு | உண்டியல் தொகை | அறவிடப்பட்டது | நிலுவை |
| | ரூபா | | | | | | | |
| வரி | 1,302,000 | 1,310,000 | 40,500 | 992,081 | 1,004,000 | 992,081 | - | 992,081 |
| உரிமம் | 13,524,200 | 13,850,000 | 11,117,699 | 3,115,431 | 3,523,001 | 2,786,516 | 2,786,516 | - |
| வாடகை | 3,312,000 | 3,500,000 | 2,884,752 | - | 14,177,700 | - | 10,022,610 | 3,047,521 |
| ஏனைய வருமானம் | 39,405,000 | 40,400,000 | 43,927,762 | 30,476,782 | 39,282,000 | 57,537,601 | 57,537,601 | - |
| மொத்தம் | 57,543,200 | 59,060,000 | 57,970,713 | 34,584,294 | 57,986,701 | 61,316,198 | 70,346,727 | 4,039,602 |

**2.2.2** **வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 5,928,536 தொகை காணப்பட்ட போதிலும் வருட இறுதியில் மேலும் அதிகரித்து ரூபா 12,236,158 நிலுவை காணப்படுகின்றது. | நிலுவைகள் அறவிடப்பட வேண்டும். | நிலுவைகள் முறையாக அறவிடப்பட எதிகாலத்தில் உரிய நடவடிக்கை மேற்க்கொள்ளப்படும். |

**2.2.3 வீத வரி**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வீதவரி ரூபா 501,000 மதிப்பீடு செய்யப்பட்டுள்ள போதிலும் ரூபா 35,000 மட்டுமே அறவிடப்பட்டுள்ளது | வீதவரிகள் அறவிடப்பட வேண்டும். | வீத வரி வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்க்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகிறேன். |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 5,466,012 மட்டுமே அறவிடப்பட்டுள்ள போதிலும் நிலுவையாக ரூபா 3,115,432 காட்டப்பட்டுள்ளது. | வாடகைகள் அறவிடப்பட வேண்டும். | எதிர் காலத்தில் நிலுவைகள் முறையாக அறவிடப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் |

**2.2.5 அனுமதிப்பத்திர கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 2,786,516 தொகை அறவிடப்பட்டுள்ள போதிலும் நிலுவை எதுவும் காட்டப்படவில்லை. | சரியான தொகை கணிக்கப்பட்டு அறவிட வேண்டும். | நிலுவைகள் முறையாக அறவிடப்பட உரிய நடவடிக்கை எதிர் காலத்தில் எடுக்கப்படும். |

**2.2.6 தமாசா வரி**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு படமாளிகையிலில் இருந்து தமாசா வரி ரூபா 992,081 பல வருடங்களாக அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகின்ற போதிலும் அப்பட மாளிகை தொடர்ந்து இயங்குகின்றது | நிலுவைகள் அறவிட சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | படமாளிகையின் தமாசாவரி அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன். |

**2.2.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,442,076 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 12,034,706 தொகையான முத்திரைக்கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதி மண்றத்தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டங்கள் பெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்** | | |
| 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிகாட்டிகள் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக எதிர்வரும் காலங்களில் குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கரடியனாறு பிரதேசத்திற்கு தேசிய நீர் வழங்கல் வடிகான் அமைப்பு சபையின் மூலம் நீர் இணைப்பினை வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டில் இருந்து 2018 ஆம் ஆண்டு வரை மாகாண சபை (PSDG) நிதி மூலம் ரூபா 4.59 மில்லியன் செலவிடப்பட்டுள்ள போதிலும் இன்னும் பொது மக்களுக்கு இதுவரை நீர் வழங்கப்படவில்லை. | 05 வருடங்களுக்கு மேலாக செயற்படுத்தப்படாமல் இருக்கின்றது. விரைவில் செயற்படுத்த வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் ஒதுக்கீடுகள் பெறப்பட்டு நீர் வழங்கப்படும். |
| (ஆ) | காசேட்டின் படி ரூபா 25 மில்லியன் தொடக்கம் ரூபா 30 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதி கையிருப்பாக காணப்பட்ட போதிலும் இதனை வினைத்திறனான வகையில் முதலீட்டு வருமானத்தை உழைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொருத்தமான கணக்கிற்கு மாற்றி வட்டி வருமானம் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைநிதி பொருத்தமான முறையில் கையாளப்பட்டு பொருத்தமான முதலீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| 16 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக | அரச நிர்வாக சுற்று நிருபத்தின்படி மட்டுமே | உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளப்படும் |

| | | |
|---|---|---|
| காணப்படுகின்றது. | ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | போது அரச நிர்வாக 25/2014ம் இலக்க சுற்று நிருபம் கருத்தில் கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும். |
| (ஆ) 05 வருடங்களுக்கு முன்னர் பதவியை விட்டுச் சென்ற ஓய்வு பெற்ற வேலையிலிருந்து நீங்கியுள்ள இடமாற்றங்களினால் சென்ற 04 ஊழியர்களிடம் இருந்து அறிவிட வேண்டிய ரூபா 147,776 கடன் தொகையை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | துரித கெதியில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆதனங்களை அடையாளம் கண்டு வருடாந்தமோ அல்லது ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியிலோ அவற்றினை மதீப்பீடு செய்து சோலைவரியினை அறவிட பல வருடங்களாக நடவடிக்கை எடுக்கவில்லை. | சோலைவரிகள் அறவிடப்பட வேண்டும். | ஆதனங்களை அடையாளம் கண்டு அவற்றினை மதிப்பீடு செய்து சோலைவரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) கடைகள் 18 ஆதனங்களை குத்தகைக்கு பெற்றவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய குத்தகைப்பணம் ரூபா 1,508,889 தொகையினை அறவிட 2009 ஆம் ஆண்டில் இருந்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குத்தகை அறிவிட சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குத்தகைப்பனம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களை பதிவேட்டில் உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது தனக்கு உரித்தான சகல காணி கட்டிடங்களை இனங்கண்டு அவற்றை அடையாளப்படுத்தி | சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு பதிவிடப்பட வேண்டும். | காணி கட்டிடங்களை அடையாளப்படுத்தி இனங்கண்டு பதியப்பட்டு உரியநடவடிக்கை |

| | | |
|---|---|---|
| வைத்திருக்க உரிய நடவடிக்கையினை மீளாய்வாண்டு வரை எடுத்திருக்கவில்லை. | | மேற்கொள்ளப்படும். |

### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரக்டர் ரெய்லர் வவுசர் நீண்ட நாட்களாக திருத்தப்படாமலிருக்கின்றது. | கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.3 வருடாந்த பொருள் இருப்பு மெய்யாய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த பொருள் இருப்பு மெய்யாய்வு மீளாய்வாண்டிற்கு செய்யப்படவில்லை. மேலும் நூலகங்கள் 11 வருடங்களுக்கு மேலாக மெய்யாய்வு செய்யப்படவில்லை. | ஆண்டுதோறும் மெய்யாய்வு செய்யப்பட வேண்டும். | தற்போது ஒவ்வொரு ஆண்டும் வருடார்ந்த பொருள் இருப்பு மெய்யாய்வு செய்யப்பட்டு வருவதுடன் நூலகங்களும் கடந்த 2018ம் ஆண்டு தொடக்கம் இதுவரை பொருள் இருப்பு மெய்யாய்வு செய்யப்பட்டு வருகின்றது |

### 3.6 இனம் காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 நூலகங்களில் வாசகர்களால் மீள ஒப்படைக்கப்படாத தொலைத்த ரூபா 102,270 பெறுமதியுடைய 800 புத்தகங்கள் தொடர்பில் அவற்றினை மீளப் பெற்றுக்கொள்ளவோ அல்லது அதற்கான பெறுமதியினை உரிய நபர்களிடமிருந்து அறவிடவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளப் பெற்றுக்கொள்ள அல்லது நபர்களிடமிருந்து அறவிடவே நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | நட்டங்கள் அறவிடப்படவேண்டும் அல்லது பதிவளிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.7 பெறுகை

### 3.7.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி பெறுவனவுகள் | பெறுகைச் சட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | தற்போது உரிய முறையில் பெறுகைத்திட்டம் |

| | | |
|---|---|---|
| இடம் பெற்றிருக்கவில்லை. | | தயாரிக்கப்பட்டு அதன்படி பெறுவனவுகள் இடம்பெற்று வருகின்றது. |

**3.8 பொது மக்களின் பாவனைக்கு திறந்துவிடப்படாத 03 சந்தை கட்டிடத்தொகுதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புல்லுமலை, ஆயித்தியமலை, கரடியனாறு ஆகிய இடங்களில் 03 சந்தைக் கட்டிடத் தொகுதிகள் USAD, NECORD திட்டங்கள் மூலம் நிதியளிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை கட்டிடம் முடிக்கப்பட்டு கட்டிடத் தொகுதிகள் இதுவரை மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படாது எதுவித வருமானங்களும் பெறப்படாது பராமரிப்பு செலவுகளை மட்டும் செய்து கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. | பொது மக்களின் பாவனைக்கு திறந்துவிடப்பட வேண்டும். | இக்கட்டிடங்களின் மூலம் வருமானத்தை அதிகரிக்க முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம் |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வுப்பிரிவினை நடைமுறைப்படுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம் கால் ஆண்டுக்கொருமுறையாவது கூட்டப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் எதுவித கூட்டமும் கூட்டப்படவில்லை. | கால் ஆண்டுக்கு ஒருமுறை கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம் காலாண்டுக்கு ஒருமுறை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் |